அவை இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. ஸ்டீமர் மற்றும் சாக்கடை வசதியினை உடனடியாகச் செய்து தருமாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–15

தாராபுரத்திற்கு ஒரு மகளிர் கலைக் கல்லூரி வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அப்பகுதியில் 60 ஏக்கர் நிலம் இருக்கின்றது. கூட்டுறவு மில் செயல்படாமல் இருக்கின்றது. அதற்கான கட்டடமும் இருக்கின்றது. 60 ஏக்கர் நிலத்தை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டு பெற்று அரசு மகளிர் கல்லூரி அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மற்ற கோரிக்கைகளை அடுத்த மானியக் கோரிக்கை விவாதத்தில் பேசிக் கொள்கிறேன் என்பதை தெரிவித்துக் கொண்டு நன்றியுடன் முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி, உட்காருங்கள். திருமதி கீதா ஜீவன் அவர்கள் உரையை நிறைவு செய்கையிலே ** குறிப்பிட்டதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

7. விதி 110–ன்கீழ் அறிக்கை

மிகச் சிறிய செயற்கைக்கோள் உருவாக்கி, நாசா–வின் முதல் பரிசு பெற்ற கரூர் மாவட்டம், பள்ளப்பட்டி, திரு. ரிஃபாத் சாருக் தலைமையிலான குழுவினருக்கு ரூபாய் பத்து இலட்சம் வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், பள்ளப்பட்டியை சேர்ந்த 18 வயது இளைஞரான திரு. ரிஃபாத் சாருக் தலைமையிலான ஆறு மாணவர்கள் கொண்ட குழு உருவாக்கிய 64 கிராம் எடை கொண்ட மிகச் சிறிய செயற்கைக்கோள் சமீபத்தில், அமெரிக்காவில் உள்ள விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான "நாசா" நடத்திய போட்டியில் கலந்து கொண்டு, உலகத்தின் 57 நாடுகளிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட 80,000 மாதிரிகளில் முதல் பரிசு பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த செயற்கைக்கோள் கடந்த 22–6–2017 அன்று விண்ணில் "கலாம் சாட்" என்ற பெயரில் "நாசா" ஏவுதளத்திலிருந்து ஏவப்பட்டது. முப்பரிமாண அச்சுத் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட இந்த செயற்கைக்கோள், வானிலை, வான்வெளியில் உள்ள கதிர்வீச்சு, வெப்பம் ஆகியவற்றை ஆராயும் திறன் கொண்டது.

சென்னையிலிருந்து செயல்படும் "ஸ்பேஸ்கிட்ஸ்" என்ற அமைப்பு இந்த மாணவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து உதவியது. இந்த சாதனையினை நிகழ்த்திய மாணவர்கள் ரிஃபாத் சாருக், யக்னா சாய், வினய் பரத்வாஜ், தனிஷ்க் திவேதி, கோபிநாத் மற்றும் முகம்மது அப்துல் காசிப் ஆகியோருக்கும், குறிப்பாக அந்தக் குழுவின் தலைமை விஞ்ஞானியாக செயல்பட்ட திரு. ரிஃபாத் சாருக்கிற்கும் இம்மாமன்றத்தின் சார்பிலும், தமிழ்நாடு அரசின் சார்பிலும், எனது தனிப்பட்ட முறையிலும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சாதனையை படைத்து, இந்தியாவிற்கு, குறிப்பாக தமிழகத்திற்கு பெருமை தேடித் தந்த மாணவர் திரு. ரிஃபாத் சாருக் தலைமையிலான மாணவர் குழுவிற்கு, மேலும் இதுபோன்ற பல சாதனைகளைச் செய்ய ஊக்கப்படுத்தும்விதமாக தமிழக அரசின் சார்பில் 10 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.